செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௬] யாழ்ப்பாணம்:- சாதாரண ஞு பங்குனி மீ உ௬உ வெள்ளிக்கிழமை (9-4-1971) [இல-உ

# தேவாலய தரிசனம்

சேலம். சிவஸ்ரீ T. N. சுப்பிரமணியக்குருக்கள் அவர்கள்

அநாதிமுத்த சித்துருவாகிய சிவபெருமான் ஒருவரையே பரமபதி என்று துணிந்து, அவர் அருளிச்செய்த வேதாகமங்களிற் கூறிய பிரகாரம் தங்கள் நிலைக்கு ஏற்றவாறு அவரை வழிபடுபவர்களே சைவர் எனப்படுவர்.

சிவபெருமானை அடியவர்கள் வழிபடும் தானங்கள் மூன்றும். அவை ஆலயத்துள்ள லிங்கம், சிவனடியார் திரு வேடம், ஆன்மா என்பன.

சைவர்கள் தினந்தோறும் ஆசாரத்தோடு வஸ்திரம் இரண்டு தரித்துக்கொண்டு அநுஷ்டானம் முடித்துத் திருக்கோயிலுக்குப் போகக் கடவர். ஸ்நானம் முதலிய நியமங்கள் இல்லாது திருக் கோயிலுக்குச் செல்லுதல் கூடாது. ஸ்நானத்திற்கு ஆலயத்தருகில் உள்ள புண்ணிய தீர்த்தம் விசேஷம்.

ஆலயத்திற்குப் போகும் பொழுது ஒரு பாத்திரத்திலே தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை முதலியவை வைத்து அரைக்குக் கீழ்ப்படாது மேலே உயர்த்தப்பட்ட கையில் ஏந்திக் கொண்டு போக வேண்டும். இவைகளுக்குப் போதாள் இல்லாதவர்கள் பத்திரபுஷ்பங்களேனும் கொண்டு போய்க் கொடுத்து வணங்குதல் வேண்டும். அதுவுங் கூடாதவர் சந்நிதியில் உள்ள செத்தை முதலியவற்றைப் போக்கியேனும் வணங்க வேண்டும்.

திருக் கோயிலைச் சமீபித்தவுடன் தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தை வணங்கி இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துக் கொண்டு உள்ளே பிரவேசித்துப் பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் செய்தல் வேண்டும்.

ஆடவர் அஷ்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

அஷ்டாங்க நமஸ்காரமாவது தலை, செவியிரண்டு, கையிரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலத்திலே பொருந்தும் படி வணங்குதலாம். பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கைகளிரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்துறுப்பும் நிலத்திலே பொருந்த வணங்குதலாம். திரயாங்க நமஸ்காரம ஆடவர், பெண்கள் ஆகிய இருவருக்கும் பொது. திரயாங்க நமஸ்காரமாவது சிரசிலே இரண்டு கைகளையும் குவித்தலாம்.

நமஸ்காரம் மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், எழு தரமாயினும், ஒன்பது தரமாயினும் செய்க. ஒரு தரம் இரு தரம் பணிதல் எழுதல் குற்றம்.

கிழக்கு நோக்கிய சந்நிதியில் பலிபீடத்துக்கு இப்பால் அக்கினி மூலையில் சிரசை வைத்து மாறு நிலத்திலுற காலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டி, பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் பூமியிலே பொருந்த, கைகளை அரையை நோக்க நீட்டி, வலக்கன்னத்தையும் இடக் கன்னத்தையும் தரையைத் தீண்டச் செய்து நமஸ்காரம் பண்ணக் கடவர், தெற்கு நோக்கிய சந்நிதியிலும் மேற்கு நோக்கிய சந்நிதியிலும் நிருதிமூலையிற் சிரசை வைத்து முன்போலப் பணியக் கடவர். வடதிசையை நோக்கும் சந்நிதியில் பலிபீடத்துக்கு வாயு மூலையில் முன் போல நமஸ்கரிக்கக் கடவர்.

இவ் வகையாக வணக்கஞ் செய்து எழுந்து கைகுவித்துக் கொண்டு சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து, கால்களை மெல்மெல வைத்துப் பிரதக்ஷிணஞ் செய்க.

கொடிமர நிழலையும், தூபி நிழலையும் கடத்தல் கூடாது பிரதக்ஷிணம் பண்ணும் பொழுது அந்த நிழலின் மூன்று கூறு நீக்கி, மற்றிரண்டு கூற்றிற் செல்லக்கடவர். திருவிழாவிற பெருமானுடன் செலலிற் பாவமில்லை. அபிஷேக காலத்தில் உட்பிரகாரத்தில் பிரதக்ஷிணம் செய்தல் கூடாது.

பிரதக்ஷிணம் செய்த பின்பு சந்நிதானத்தில் நமஸ்கரித்து, துவாரபாலகரையும் திருநந்திதேவரையும் வணங்கி அனுமதி பெற்று உள்ளே போகக் கடவர். விநாயகருடைய சந்நிதானத்தில் முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினுலும் நெற்றியிலே மும்முறை குட்டி வலக் காதை இடக் கையினுலும் இடக் காதை வலக் கையினுலும் பிடித்துக் கொண்டு மும்

வளர்ச்சி 4-ஆம் பக்கம்

உ
திருச்சிற்றம்பலம்

சங்கரனே நின்பாதம்
போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம்
போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம்
போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம்
போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு
மாலுங் காணு
அனலுருவா நின்பாதம்
போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம்
போற்றி போற்றி
திருமூலட் டானனே
போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

-திருநாவுக்கரசுசுவாமிகள்.

## யாழ்ப்பாணப், சைவபரிபாலன சபை
நடாத்தும்
## சைவசித்தாந்தத் தேர்வுகள்

இவ்வாண்டுச் சித்தாந்தப் பிரவேச பண்டிதர், சித்தாந்த பாலபண்டிதர் தேர்வுகள் எதிர்வரும் ஆவணி மாதம் 24, 25, 26 ஆம் தினங்களில் (9, 10, 11-8-71) நிகழும்.

இத்தேர்வுகளுக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் வைகாசி மாதம் 8-ம் நாள் (22-5-71) அல்லது அதற்கு முன் தேர்வுச் செயலாளரிடம் சேரத்தக்கதாக அனுப்பப்படல்வேண்டும்.

தேர்வு விண்ணப்பங்கட்கும், ஏனைய விபரங்கட்கும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

தேர்வுச் செயலாளர்,
சைவபரிபாலன சபை,
450. காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## தக்ஷிண கைலாச மான்மியம்

[ "சிவாகம ஞான பாநு
சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி]

[குருக்கள் ஐயா அவர்கள் சிவபதமடையமுன் எங்கள் பத்திரிகைக்கு வழங்கிய விஷயதானத்தின் எஞ்சிய பகுதி]

(முன் வளர்ச்சி — 9)

### வணிகர் தனம்பெற்றமை

மதுராபுரியில் பெருஞ்செல்வனாகிய வணிகர்குல திலகன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் வாணிகத்தினலே பொருளீட்டிப் பலவகை இரத்தினங்களைச் சம்பாதித்து இருக்கும் நாளில் அவனுக்கு அளகேசன், சந்திமான் என்னுமிரு புத்திரர்களும், நாகவல்லி, ஏமவல்லி, இரத்தினவல்லி என்னும் மூன்று புத்திரிகளும் பிறந்தார்கள். அவன் சிவபக்தியுடையவனுய் பல சிவபுண்ணியங்களைச்செய்து மனைவி

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

திருவிளையாடற்புராணம் 4.

## சுந்தரநாயகன் அருள்பெற்ற துறக்க நாட்டரசன்

(தெல்லியூர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மா அவர்கள்.)

ததீசி முனிவரின் முதுகெலும்பாகிய வச்சிராயுதத்தைப்பெற்ற இந்திரன் மிக வலிமைபெற்ருன். தேவசேனையுடன் சென்று விருத்திரனையெதிர்த்தான். விருத்திரன் சேனைகளும் எதிர்த்தன. தேவர்சேனைகளுக்கு விருத்திரன்சேனைகள் தோல்வியுற்றோடின. இந்திரனும் விருத்திரனும் ஒருவரையொருவர் நேரே எதிர்த்து யுத்தம்செய்தார்கள். பல தேவப்படைகளை இருவரும் ஏவினுர்கள். இறுதியில் இந்திரன் வச்சிராயுதத்தைக் கையில் எடுத்தான், புதிய வச்சிராயுதத்தின் வலிமையைக் கண்ட விருத்திரன் கடலினுள் போய் ஒளித்தான்.

இந்திரன் பிரமதேவர் ஆலோசனைப்படி அகத்தியரிடம் சென்ருன். அகத்தியரிடம் விருத்திரனின் செயலைக் கூறினுன். அகத்தியர் இறைவன் அடியாருட் சிறந்தவர். பஞ்சப் புலன்கள் வழிச்செல்லும் மனதையடக்கி இறைவழிபாட்டில் மனதைச் செலுத்தும் சிறப்புடையவர் அவர் இறைவரின் "ஊழிச்செந்தீ" ஒத்த உருவினைச் சிந்தனைசெய்தார். விருத்திராசுரன் எந்தக் கடலில் மறைந்திருந்தானே அந்தக் கடல்நீரைக் கையிற் சிறிதளவாக அடக்கிப் பருகி விட்டார். இதில் என்ன அதிசயம்? முப்புவனங்களையும் ஆக்கி அழிக்க வல்லவர் சிவனடியார்கள்.

"......பிறைசேர் சென்னி
ஐயனருளைப் பெற்ருர்க்
கதிசய மீதென் கொன்மூன்று
வையமுத தொழிலுஞ் செய்ய
வல்லவரவரே யன்றோ"

வளர்ச்சி 4ம் பக்கம்

உ
## சிவநாமத்தைச் சேப்புவோம்!

"இறை ஒளி"

"விரோதி இருது விநோத வருடம்
குரோத மகன்று குணமாய்ப் — பரோபகா
ரப்பண்பு தான்ப ரவச்சிவ நாமத்தைச்
செப்புவோம் சிந்தை தெளிந்து"

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரண ஞூ பங்குனி மீ உகூ-உ வெள்ளிக்கிழமை [1971]

## மோனமென்பது ஞான வரம்பு

உலக நாயகராகிய சிவபெருமான் கல்லாலவிருட்சத்தின் கீழிருந்து சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நான்கு இருடிகளுக்கும் திவ்விய ஆகமங்களிலே சொல்லப்படும் சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று பாதங்களையும் உபதேசித்தருளிய பின்பு இருடிகள் சிவபெருமானை நோக்கி ஞான பாதத்தை உபதேசிக்கும் வண்ணம் கேட்டார்கள்.

இருவரு மூணரா வண்ண லனவேள் ளெயிறியாமை
சிரநிரை யநந்த கோடி திளைத்திடு முரத்திற் சீர்கொள்
கரதல மொன்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி
யொருகணஞ் செயலொன் றின்றி யோகு செய்வாரி லுற்றான்.

பிரம விஷ்ணுக்களிருவரும் முடியும் அடியும் அறிதற்கரியவராகிய சிவபெருமான் வெண்ணிறமான பன்றிக் கோடும் ஆமையோடும் அநேக கோடி சிரநிரைகளுந் தரிக்கப்பெற்ற தமது இருதயத்தில் ஒரு திருக்கரத்தை வைத்து ஞான முத்திரையைக் காண்பித்து ஒரு கணஞ் செயலொன்றின்றி யோகஞ் செய்பவர்களைப்போல விருந்தனர். கெடுதலில்லாத ஞான போதமானது சொல்லினளவிறந்ததென்பதை யுணர்ந்து அவர்கள் தங்கள் தங்கள் மனத்தின் அடக்கத்தைப் பெற்றார்கள். ஞானத்தைப் பெறுவதற்கு மன அடக்கமே சிறந்த வழியாகும் எங்கள் சைவ சமயத்தில் கூறப்பட்டிருக்கும் சமயக் கிரியைகள் யாவும் ஒருவனது உள்ளத்தில் இம் மன அடக்கத்தை உற்பத்தி பண்ணவே விதிக்கப்பட்டன.

இந்த வுண்மையை யாழ்ப்பாணத்திலே பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு சில தினங்களுக்கு முன் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் சமுகமளித்த ஸ்ரீலஸ்ரீ சிவபாலயோகி மகராஜ்சுவாமிகள் பிரத்தியட்சமாகக் காட்டியுள்ளனர். ஆண்டவன் எப்பொழுதும் எம்முடன் நீங்காமலிருக்கின்றார். உலக விவகாரங்களில் ஈடுபட்டுழலும் மாந்தர் அந்த உண்மையை யறியார். உலக விவகாரங்களில் மனத்தை ஐம்பொறி வழியே செல்லாமற் றடுக்கின்ற உத்தமர்கள் ஆண்டவனைத் தமது உள்ளங்களில் எப்பொழுதும் தரிசித்துக் கொண்டிருப்பார்கள். அத் தரிசனமே உண்மையான இன்பம். அதனைப் பெறாமையே துன்பம். இவ்வுண்மையை அனேக மக்கள் குறித்த சிவபால யோக சுவாமி மகராஜ் மூலம் அறிந்து கொண்டனர். சுவாமிகளுடைய வாழ்க்கை வரலாறு இறைவன் எவ்வண்ணம் ஒரு ஆன்மாவை ஆட்கொள்ளுகின்றானென்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

"ஆட்பா லவர்க் கருளும் வண்ணமு மாதி மாண்பும்
கேட்பான் புகிலள வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவை கேட்கத் தக்கார்".

## பிரபல வீணை வித்துவான் பாலச்சந்தர் ஈழத்தில் கௌரவிக்கப்பெற்றார்.

வட இலங்கைச் சங்கீத சபை 31-3-71 புதன்கிழமை யன்று உலகப் பிரசித்தி பெற்ற வீணை மேதை எஸ். பாலசந்தர் அவர்களுக்கு 'வீணைவாத்ய வித்யாதரன்' என்னும் பட்டத்தை வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது. நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை மண்டபத்தில் மேற்படி சபை தியாகராஜ உற்சவம் நிகழ்த்திய வாரத்தில் இக் கொண்டாட்டம் நடைபெற்றது மிகவும் பொருத்தமானதே. திரு. பாலச்சந்தர் கர்நாடக சங்கீத மூர்த்திகளுள் ஒருவரான தியாகராஜ சுவாமிகளின் படத்துக்கு விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

டாக்டர் க. சிவஞானரத்தினம் அவர்கள் சற்று நேரம் தலைமைதாங்கி வீணை மேதையை வரவேற்றார்.

இவ்விழாவின் பெரும்பகுதிக்கு தலைமைதாங்கிய வடமாகாணக் கல்வியதிகாரி திரு. டபிள்யூ. டி. சி. மகந்திலக அவர்கள், தமிழரசர் வாழ்ந்த நல்லூரிற் கலைஞர்கள் பலர் முன்னுளில் வாழ்ந்திருப்பார்களென்றும் அத்தகைய இடத்தில் வித்துவான் பாலச்சந்தருக்கு உபசார வார்த்தை கூறுவது மிகவும் பொருத்தமானதென்று குறிப்பிட்டார்.

திரு. பரம் தில்லைராஜா, திரு ராம். குமாரசாமி ஆகியோர் வீணைமேதையின் திறமையைப் பாராட்டி உரை நிகழ்த்தினர்கள். இசைப்புலவர் திரு. செல்லத்துரை அவர்கள் கலாசிகாமணி பாலச்சந்திரருக்கு வாழ்த்துப்பா பாடி கௌரவித்தார்

பதிலுரை வழங்கிய கலாசிகாமணி பாலச்சந்தர் கூறியதாவது:— ஆறு வயதிலே கெஞ்சிரா, தபேலா முதலிய வாத்தியங்களை வாசித்த நான் சில ஆண்டுகளுக்குப் பின் எனக்குப் பரிசாகக் கிடைத்த 'சிதார்' வாத்தியத்தை நானாகவே வாசிக்கக் கற்றேன் இளம் வயதிலே எனக்குப் பட்டங்கள் வழங்கினார்கள், அவற்றையெல்லாம் வீட்டில் வைத்துவிட்டேன். உண்மையில் அப்பட்டங்களை மனதில் ஏற்றுக் கொள்ளவில்லை. 25 ஆண்டுகள் ஒரு துறையிற் சேவை செய்தபின் வரும் பட்டங்களை ஏற்றுக்கொள்வதுதான் முறையென நம்பினேன். 1943 ஆம் ஆண்டு வீணை வாசித்து அவ்வாத்தியத்துக்கே என்னை அர்ப்பணித்தேன். எனவே 25 ஆண்டுகளின் பின் 1968 ம் ஆண்டிலிருந்து எனக்குக் கிடைத்த பட்டங்களை ஏற்றுக்கொண்டேன். என் காலத்திற் புகழ் பெற்ற எல்லா இசைவல்லுனர்களுடைய கச்சேரிகளையும் நன் கேட்டிருந்த போதிலும், எனக்கு நன்றாகக் கவர்ந்த இசைமேதைகள் டைகர் (Tiger) வரதாச்சாரி நாதஸ்வரச் சக்கரவர்த்தி ராஜரத்தினம்பிள்ளை மகாராஜபுரம் விஸ்வநாதஐயர். திருவாலங்காடு சுந்தரேச ஐயர் (வயலின்), ஆகிய நால்வருமாவர். 25 ஆண்டுகளின் சேவைக்குப் பின் எனக்கு கிடைத்த பட்டங்கள் 24, இன்று 25ம் பட்டத்தைக் கலைமலிந்த யாழ்ப்பாணத்தில் முருகப்பெருமான் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள நல்லூரிற் பெறுவதிற்பெருமையுறுகிறேன்.

(நமது நிருபர்)

அணிந்துரை
அரங்கம்

## சித்தாந்த சைவ நெறித் திறவுகோல்

ஆக்கியோன்:
க. தியாகராசா அவர்கள்
சரசாலை.
விலை ரூபா 1-75

இந்நூலாசிரியர் தமிழையும், சைவ சமயத்தையும் ஓம்புகின்ற பண்புடையவர். திருவருளினால் கொழும்புத்துறை ஞானமுனிவருடைய உபதேசத்தைப் பெற்று, தமது சைவப் பணியை இறைபணியாகக் கருதி ஆற்றிவருகின்ற உத்தமர். இப்பெரியார் முன்பு சில ஆண்டுகளாக எங்கள் "இந்துசாதனம்" தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளின் துணையாசிரியராக அருந்தொண்டாற்றியவர். 'சமயங்களின் தாயனைய சிவநெறி' என்னும் நூலை இதன் முன் ஆக்கி உதவினர். எங்கள் சபை அங்கத்தவராக இருந்து பணியாற்றியவர். சைவ சித்தாந்தநெறியில் ஒழுகுஞ்சீலர்; சிவ சிந்தனையும், சிவனடியாரைப் போற்றும் பண்பும் இயல்பாகவே கொண்டவர். 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்வு வழி இது' என வாழ்ந்து காட்டும் வழிகாட்டி இவர் என்றால் மிகையன்று

"செய் வினையுஞ் செய்வானு
மதன்பயனுஞ் சேர்ப்பானு
மெய்வகையா னன்காகும்
விதித்தபொருளெனக்
கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவனென்
றருளாலே யுணர்ந்தார்"

சாக்கியநாயனார் பிறவிப் பிணியை நீக்குதற்கரிய வழியினை ஆராய்ந்தார். முதலில் சாக்கியர் புத்தர்களது அறநூல்களைப் பயின்றனர். மற்றைய சமய நூல்களையும் ஆராய்ந்தார். ஈற்றில் சிவநெறியே வீட்டு நெறிக்குரிய உண்மைப்பொருளை உணர்த்துகின்றதென்றதையுணர்ந்து சிவனருளினை மறவாது வாழ்ந்தனர்.

செய்வானும் செய்வினையும் அதன்பயனும் சேர்ப்பவனும் ஆகிய நான்கும் சைவசித்தாந்த நெறி ஒன்றிற்கேயுண்டென்பதை சிந்தித்து சிவநெறியில் நின்று சிவனடியையடைந்தனர்.

சைவசித்தாந்த நெறியை உலகுக்கு திட்பநுட்பமாக விளக்குவது மெய்கண்ட தேவநாயனார் அருளிச்செய்த சிவஞானபோதமாகும். அதற்கு உரையாக விளங்குவது சிவஞானசித்தியார். ஒவ்வொரு சூத்திரத்திற்கும் பொழிப்புரையும் அவ்வச் சூத்திரத்திற்குரிய சிவஞான சித்தியார் முதற் செய்யுளும் பொழிப்புரையும் தந்து விளக்கம் செய்திருக்கின்றனர். இந்நூலாசிரியர் தமது குருவினிடம் தாம் பெற்ற உபதேசத்தை சைவ சித்தாந்த முறையிலே விளக்குகின்றனர். சாதனவியல், பயனியல் ஆகிய இரண்டினுமுள்ள கருத்துக்களை சைவத் தெய்வத் திருமுறைகள் வாயிலாகவும், யோகர் சுவாமிகள் பாடியருளிய நற்சிந்தனை செய்யுட்கள் மூலமும் விளக்குகின்றனர். சாதனை செய்தாலன்றி ஞானம் கிட்டாதென்ற உண்மையை ஆசிரியர் வற்புறுத்தியுள்ளனர்.

சைவசித்தாந்த உண்மைகளையறிந்து சாதனை செய்து வீட்டின்பத்தைப் பெறும் வழியில் நூலமைந்திருக்கின்றது. இந் நூலினைச் சைவநன்மக்கள் பெற்றுப் படித்து நற்கதியடைவார்களாக.

## தக்ஷிண கைலாச மான்மியம்

( 1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி )

புத்திரர் முதலியவர்களோடு நெடுங்காலம் வாழ்ந்திருந்து சிவபக்தி விசேடத்தினால் சிவபதமடைந்தான்.

தந்தையையிழந்து வாழும் அவர்களுடைய செல்வத்தைக் கண்ட சில கள்வர்கள் ஒரு இரவில் வீட்டினுள் புகுந்து, தனதானியம் முதலிய எல்லாப் பொருட்களையும் கொள்ளை கொண்டு சென்றார்கள் மறுநாட் காலையில் வணிக புத்திரர்கள் இருவரும் பெருந்துக்கங்கொண்டு அரசனிடம் போய்த் தங்கள் பொருள் முழுவதும் கொள்ளைபோன செயலை முறையிட்டார்கள். அரசன் கள்வரைத் தேடியும் பிரயோசனப்படவில்லை. அதை அறிந்த புத்திரர்கள் துக்கங் கொண்டவர்களாய் மீனாட்சியம்மை பாகராகிய சோமசுந்தரக் கடவுளுடைய திருச்சந்நிதியிற் போய் முறையிட்டார்கள். உலகம் கடைத்தேறும் வண்ணம் பல திருவிளையாடல்களைச் செய்தருளுகின்ற சோமசுந்தரக் கடவுள் வணிகமைந்தர் மீதிரங்கிக் காட்சிகொடுத்தருளிப் புன்முறுவல் புரிந்து, இலங்கையில் கதிர் மென்னுமொரு தலமிருக்கின்றது. சுப்பிரமணியத் தலங்களுள்ளே அது மிகமேலானது. வேதங்களாலுந் துதிக்கப்பட்டது. அத்தலத்தில் எமது குமாரன் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டு வள்ளிநாயகி தெய்வதயானை சமேதராய் வீற்றிருந்தருளுகின்றான். நீங்கள் அத்தலத்திற் போய்த் தரிசித்து வணங்கி, உங்கள் குறையை முறையிட்டால் அவன் விரைந்து நீங்கள் விரும்பிய பிரகாரம் அருள்புரிவான் என்று சொல்லிமறைந்தருளினார். வணிககுமாரர் கடவுளுடைய திருவாக்கைக்கேட்டுப் பெருமகிழ்ச்சியுடையவர்களாய், சோமசுந்தரக் கடவுளை வணங்கி விடைபெற்றுக்கொண்டு. மதுரையை நீங்கிப் புறப்பட்டு மரக்கலமேறிக் கடலைக்கடந்து ஈழத்தில் வந்திறங்கிக் கதிர்காமம் போய் மாணிக்கங்கையில் ஸ்நானம் செய்தார்கள். ஆடிமாச மகோற்சவத்தில் கதிர்காமநாதர் தேரில் ஆரோகணித்து வீதியிலெழுந்தருளுதலைக் கண்டு வீழ்ந்து வணங்கி, தோத்திரஞ்செய்தார்கள். பிறவித் துன்பத்துக்கு மூலமான பாவங்களை நீங்கி, கடவுளுடைய திருவருளினால் திரவியங்களையும், பலவகை இரத்தினங்களையும் பெற்றுக்கொண்டார்கள். மேலும் மறுமைக்கு ஏதுவாகிய மெஞ்ஞானத்தையும் பெற்றுக்கொண்டார்கள். இவ்வாறாக இம்மை மறுமைக்குரிய இருவகைச் செல்வங்களையும் பெற்றுக்கொண்ட வணிக குமாரர் கதிர்காமேச்சுரரை மெய்யன்போடு வணங்கி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு கடலைக் கடந்து மதுராபுரியை அடைந்து சிவ கைங்கரியங்களைச் செய்துகொண்டு தமது சுற்றத்தாரோடு வாழ்ந்திருந்து சிவபதமடைந்தார்கள்.

(வளரு)

எங்கள அறிவித்தல்

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை இந்துசாதனம் தமிழ் ஆங்கிலக் காரியாலயம் இரண்டிலும் 13 4 71 தொடக்கம் 17-4-71 முடிய புதுவருஷத்துக்காக விடுதலைநாட்களாகும். 16-4-71-இல் இரு பத்திரிகைகளும் வெளிவரமாட்டா.

21-3-71. — அதிபர்.

## திருவையாறு பஞ்சநதீசுவரர்...

3- ஆம் பக்கத்தின் வளர்ச்சி

காலம் யாகசாலைபூஜைகளை வேத சிவாகம திருமுறைப்பாராயணங்கள் திருநெறிய தெய்வத்தமிழ் மகாநாடு, இன்னிசை கதாகாலட்சேபங்கள் இவைகளுடன் சிறப்புற நடைபெற்றது. பல மடாலயங்களின் தலைவர்கள் பேரறிஞர்கள் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஜன சமுத்திரம்போல் கூடி மகா கும்பாபிஷேகத் தரிசனம் செய்தார்கள். கயிலை குரு மகாசந்நிதானம்அவர்களின் அரிய சமயப்பணிகள் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய சிறப்புடையனவாகும் என மக்கள் கருத்துவெளியிட்டனர்.

- (எமது சிதம்பரம் நிருபர்)
திரு. மா. பாலசுப்பிரமணியன்

## திருவையாறு பஞ்சநதீசுவர சுவாமி கோவில்

## மகா கும்பாபிடேகம்

திருக்கயிலாய பரம்பரைத்தரும புரவாதீனத்திற்குச் சொந்தமான 27 சிவாலயங்களில் ஒன்றான திருவையாறு ஸ்ரீபஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தான ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தை ஆதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகள் பங்குனித் திங்கள் 17 ஆம் நாள் காலை சிறப்பாக நடத்திவைத்தார்கள். சுமார் 5 இலட்சம் ரூபாய்க்குமேல் செலவுசெய்து ஜீரணோத்தாரண நற்பணிகள் அழகாகச் செய்யப்பட்டுள்ளன.

ஆதீன வேதஆகமப் பாடசாலை முதல்வரான சிவாகம வித்வான் 'சிவாகம ரத்னகரா' சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் யாகசாலையில் பிரதமஆசாரியராக அமர்ந்து சுமார் 100 க்கு மேற்பட்ட சிவாசாரியர்கள் 6

வளர்ச்சி 2ம் பக்கம்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தத்துவ வழக்கு இல: 2433/T

பண்டத்தெருப்பு காலம் சென்ற பொன்னையா தியாகராசாவின் தத்துவ வழக்கு பொன்னையா தியாகராசாவின் கைம் பெண் தங்கேஸ்வரி குமாரபுரம், பரந்தன் — தத்துவகாரி

எதிராக

1. தியாகராசாவின் மகள் செல்வராணி 2. தியாகராசாவின் மகன் காலம்சென்ற புஷ்பராணி 3. தியாகராசாவின் மகள் ஜீவராணி அனைவரும் குமாரபுரம் பரந்தன் 1-ம், 2-ம், 3-ம் எதிர்வாதிகள் வயது குறைந்தவர்கள் அவர்களின் பாது காவலர் 4. பொன்னையா கைம் பெண் அன்னமுத்து பிரா[illegible]தை பண்டத்தெருப்பு

—எதிர்வாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் இல. 2433/T தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் தங்கு விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை அந்தத் துண்டுக் காணிக்குள் நின்று (28-4-71) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் பிரசித்த ஏலத்தில் என்னால் ரூபா 60,000/— க்கு மேற்பட்ட ஆகக் கூடிய கேள்விக்காரருக்கு பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தெருப்பு கோயிற்பற்று பண்டத்தெருப்பு இறை சதுரங்கனஓலையும், சூனியலூடையும் மறு பிரிவுகளும் சேவையர் முத்துக்குமாரசாமி அவர்களின் பிளான் No. 1804 க்கு அமைவாக உள்ள லொற் 1ம [illegible] தி. 5 குழி 11, 4/10 இதின் கிழக்குப் பக்கமாக 15 அடி அகலமுள்ள பாதை தெற்கெல்லைக் காணிக்கு இது ஊ, தி. $2\frac{1}{2}$ பும் கல்வீடும் கிணற்றில் ஒரு பாகமும் வான் பயிர் செய் பனிகளும இதற்கு எல்லை கிழக்கு பொன்னையா குமாரவேலுவின் ஆதனம். வடக்கு ரோட்டும் மடத்துக்குரிய ஆதனமும். மேற்கு மடத்துக்குரிய ஆதனமும். 15 அடி அகலம் கொண்ட பாதையும். தெற்கு வடலியடைப்பு பண்டத்தெருப்பு M. P C. S பூவேலைக்குரிய ஆதனம். இதில் கிணற்றின் பாதையும் வழி வாய்க்காலும் மேற்கெல்லைக் காணிக்கு புறநீக்க. மேற் கட்டிய பாதை வில பாவிப்பு உரித்தும். இது அடங்கலும் பதிவு இல E 405/151.

சி. செ. மாரிமுத்து,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலத்தார்.
"விதானை வளவு"
சித்தன்கேணி, 4-4-71.
M. 7 9—4—71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 7329

1. வி. அ முருகேசம்பிள்ளையின் மனைவி
2. ஞானதேவி இருவரும், காரைநகர் கிழக்கு, காரைநகர். இராமநாதர் முருகேசு, காரைநகர் வாசி அட்டோனி மூலமாக —வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணை கிழக்கு. அரசடி வீதி. ஆண்டி சின்னி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B.—7329ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் துண்டுக்காணி 1971-ம் ஆண்டு வைகாசி மீ 7-ந் திகதி (7-5-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 6450/-ம், 29-3-65 தொடக்கம் 12-9-67 வரைக்கும் ரூபா 3000/-க்கு 11 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 440-36 இதில் தீர்வை [illegible] கொடுப்பட்ட தொகை ரூபாய் 1825-00ம், கோட்டுச் செல[illegible] கொடுபட்ட தொகை ரூபாய் 175/- கழிய

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "நீர்நொச்சியடி" [illegible]ப்பு நில இலாச்சம் ஒன்று குழி 16 இதில் கிழக்குப் புறமாக நிர்ணமான குழி 16 எல்லை கிழக்கு: கையொழுங்கை வடக்கு: பொன்னுத்துரை [illegible] ஆதனம், மேற்கு: சரவணை பூவிலிங்கம் மனைவி பூமணியின் ஆதனம் தெற்கு: [illegible] கவிலிங்கம் கட்டப்பட்ட கட்டிடமும், வீடும், பயிர் வகைகளும், அதில் இருக்கும் கிணற்றில் பங்கும், வடக்குப் பக்கமாக இருக்கும் கிணற்றிற் பங்கும, வழிவாய்க்காலும் கையொழுங்கையிற் பங்கும். பதிவு இலக்கம்: D. 250/289

107, பெரியதெரு, யாழ்ப்பாணம், 1—4—71

எ. பி. பீ. எதிர்மன்னசிங்கம்
வெந்திஸ் கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 1 9-4-71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல: M B 10399

காரைநகர் கிழக்கு (1) செல்லப்பா சதாசிவம் அவரது பாரியார் (2) இந்திராணியும் —வழக்காளிகள்

எதிராக

காரைநகர் கிழக்கு, சண்முகம் தில்லையம்பலம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 10399-ம் இலக்க வழக்கின் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு வைகாசி மாதம் 3ம் திகதி (3-5-71 திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3718-50ம், 24-10-68 தொடக்கம் 30—3—69 வரைக்கும் ரூபா 3000/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் இறுக்கும் வரை முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 294-60 சதம் இதில் ரூபா 200/- தவிர்ந்த மிகுதி

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் காரைநகர் கோவிற்பற்று தீவுப்பிரிவு காரைநகர் கிழக்கு 'மணக்கை' நெற்காணி கிலப்பரப்பு 20 எல்லை கிழக்கு சிவப்பிரகாசம் கந்தையாவும் அவரது மனைவி சுந்தரம்மாவினதும் ஆதனம், எல்லை வடக்கு இராமநாதர் முத்துக்குமாருவினது ஆதனம். எல்லை மேற்கு சண்முகம் சுப்பிரமணியத்தின் ஆதனம், எல்லை தெற்கு அபேயவிக்கிரமவினது மனைவி சிவகாமசுந்தரியின் ஆதனம். இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும். பதிவு இலக்கம் C. 263/119

"வடிவேல் உதயம்"
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்.
1-4-71

சி. ஆ. த. வடிவேலு, J. P
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
ஏலவிற்பனையாளரும்:
எம் 4 9—4—71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

காரைநகர் காரைநகர் கிழக்கு, களபூமி, குமாரவேலு கந்தையாவும் ஷெ பெண் சுந்தரமும் வழக்காளிகள்

வழ: இல. M B 8932 எதிராக

1. காரைநகர் முருகேசு சிவபாதசுந்தரம்
2. யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை மேற்கு. இராமலிங்கம் மகள் பரமேஸ்வரியும்
3. ஷெ இராமலிங்கம் மகள் மகேஸ்வரியும்

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8932-ஆம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971ம் ஆண்டு வைகாசி மீ 7-ந் திகதி (7-5-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 46200/- இதில் ரூபாய் 40000/-க்கும் 15—3—67 தொடக்கம் 27—1 70 வரைக்கும் 100க்கு $8\frac{1}{2}$% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 797-69 (கொல்வளித்தசெலவு ரூபா 581-01 வெலியாத்துச்செலவு ரூபாய் 118-50 எதிர்வருங் செலவு ரூபாய் 98-18 இதில் ரூபாய் 4000/- 6-8-1969ம் திகதியில் கொடுபட்ட வகையில் கழிபடவேண்டியது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை "தாண்டிக்குளக்கரை ஐநூத்துவான் வயல்வரம்பும் கட்டையடி திடலும் ஐநூத்துவான் தலைமடையும் ஐநூத்துவான்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம்: M B 10694

யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணை மேற்கு. B. A. தம்பி ஒழுங்கை சின்னத்துரை கைம்பெண் நாகேஸ்வரி —வழக்காளி

எதிராக

கொக்குவில் மேற்கு. கொக்குவில் (1) சடையர் வீரசிங்கமும் (2) மனைவி தங்கமுத்துவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10694 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஆண்டு வைகாசி மாதம் 15-ம் திகதி (15—5—71) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1195/-ம், 20-3-69 தொடக்கம் 16—9—69 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 296-85 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் டிவிஷனும் நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் இறை 'கள்ளிக் கொக்கான் கலகக் கொக்கான்' எனும் காணி. பர. கில. இலாச்சம் 1, 1/2 யும் மேற்குப் பக்க காணிக்கும், தோட்டத்துக்கும் சென்றடையும் வழியும் காணியும் ஒருமித்து, இந்த பர. கில. இலா. 1, 1/2 க்கும் எல்லைகள்: கிழக்கு கந்தர் சடையரின் ஆதனம், வடக்கு வயித்தி இராமன் பெண் கனகம்மாவின் ஆதனம். மேற்கு கந்தன் சுப்பனின் ஆதனம், தெற்கு சிவசம்பு மயில்வாகனத்தின் ஆதனம். மேற்கு பக்கக் காணியின் கிணற்றிலும் அதைச் சேர்ந்தவைகளின் உரிமையும், தண்ணீர்ப் பங்கும், வடக்குப் பக்கக் காணி ஊடாக தெற்குப் பக்கக் காணிக்குச் செல்லும் பாதை வழி உரிமையும், வழிவாய்க்கால் பாவிப்பு உரிமையும் உள்ளதும் உடையதும் யாழ்ப்பாணம், காணிக் கந்தோர் பதிவு இலக்கம்: D. 279/286

107, பெரியதெரு.
யாழ்ப்பாணம்.
10-3-71

எ. பி. பி எதிர்மன்னசிங்கம்
கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்.
எம். 6 9-4-71

---

## AUCTION SALE

## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோர்ட்டில் வழ: இலக்கம் 9804

பொன்னுத்துரை பாலேன்ரு, தொண்டமனாறு. —வழக்காளி

எதிராக

1 சரவணமுத்து நவரத்தனமும்
2 பெண் பொன்னம்மாவும். மூளாய் கிழக்கு. மூளாய், —எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனங்களை 1971-ஆம் ஆண்டு வைகாசி மீ 16-ஆந் திகதி (16-5-71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

இவ்வாதனங்கள் கனகராயன்குளம் உபதபாற்கந்தோருக்கு அருகாமையில் உள்ளன.

ஆதன விபரம்

வடமாகாணம் வவுனியா டிஸ்திறிக் வவுனியா வடக்குடையாலூர்ப்பற்று கனகராயன்குளம் இறை 312762 ஆம் இலக்கப் படத்தில் 2091/1365 ம் இலக்கக் கண்டம் "ஆத்தியடிக்காடு" ஏக்கர் 1 பேட்சு 25 இதில் மேற்குப் புறமாக றூட் 2 பேட்சு $12\frac{1}{2}$ எல்லை கிழக்கும் வடக்கும் மேற்குறித்த 2 ஆம் எதிரியாகிய சரவணமுத்து நவரத்தினம் பெண் பொன்னம்மாவுக்குடையவாதனம், மேற்கு முடிக்குரிய ஆதனம், தெற்கு கிராமச்சங்கத் தெரு, இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும்.

ஷெ இறை 4091/1364 ஆம் இலக்கக் கண்டம் "ஆத்தியடிக்காடு" றூட் 2 பேட்சு 15 இதில் ஆட்சிப்படி கிழக்குப்புறமாக மூன்றிலிரண்டு பங்குக்கு றூட் 1 பேட்சு 23 1/3 எல்லை கிழக்கும் வடக்கும் வான் (Channel) தெற்கு மேற்சொல்லிய ஆதனம்; மேற்குப் பன்னிரண்டு (12) அகலமுள்ள ஒழுங்கை, இதடங்கலும், இதைச் சேர்ந்தவைகளும் ஆனால் குறித்த மேற்குப் பக்கத்து எல்லைக் காணியில் எட்டடி (8அடி) அகலமுள்ள பாகம் தவிர்க்கப்படவேண்டும். ஆனால் 4 அகலமுள்ள பாகம் மேற்குப் புற எல்லைக்காணியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| தீர்வைத்தொகை | ரூபா 20,762-00 |
| வட்டி ரூபா 15000/-க்கு 10 வீத வட்டி 9-10-67 தொடக்கம் 30-11-68 வரை | 1720-25 |
| என்னும் வரவேண்டிய தொகை | 2068-87 |
| முழுத்தொகை ரூபா | 24551-12 |

புலோலி மேற்கு,
புலோலி, 5-4-71.

க. நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
எம். 8 9-4-71.

---

வதியும் ஐநூத்துவானும் மறுபிரிவுகளும்" (Thandikulankarai Ainutuwan Vayal Varambu and Kaddalyadithidal and Ainutuwan Thalaimadai and Ainutuwan Pathi and Ainutuwan and other Parcels பர. தெ இல. 1 (ஒன்றும்) குளி $3\frac{1}{2}$ யும் இட்டங்கிக் கட்டடமும். குசினியும், கக்கூசும், இணையும் மேற்கெல்லை மதிலில் அரைவாசியும், தெற்கேயிருக்கும் ஒழுங்கையில் பங்கும் அதைப் பாவிக்கும் உரித்தும், உத்தரவுபெற்ற உலாந்தா J. D. வீரசிங்கத்தால் 6-8-1941 ம் திகதியில் 1691ம் இலக்கத்தில் முடிந்த படத்தில் காட்டியிருப்பதுமான இந்த தெற்பரப்பு 1 குளி $3\frac{1}{2}$க்கும் எல்லை கிழக்கு குமாரவேலு சங்கரப்பிள்ளையினுதனம், வடக்கு: ஆஸ்பத்திரி வீதி, மேற்கு: ஆறுமுகம் கதிரவேலு பெண் பாலுபதிப்பிள்ளையினுதனம், தெற்கு: ஒழுங்கை, இறைவரி இலக்க நம்பர்: 218/1 இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும். D 261/78 இல் பதியப்பட்டிருக்கிறது.

இல. 24, முதலாம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 25-3-71,

க. சுப்பிரமணியம்
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்.
எம். 3 9-3-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M. B. 5153

(1) சின்னத்தம்பி இரத்தினமும் மனைவி

(2) இராசநாயகி — உடுவில் வழக்காளி.

எதிராக

அம்புக்குட்டி திருநாவுக்கரசு உடுவில் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 5153-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஞு வைகாசிமீ 7-ம் உ (7-5-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3367-50 சதம் 11-10-62 தொடக்கம் 27-5-65 வரைக்கும் ரூபா 3000/-க்கு 3 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 372-81 சதம் அதா வது ஏற்பட்டசெலவு ரூபாய் 236-92 சதம் வெலிவாத்துச்செலவு ரூபாய் 68-82 சதம் இனிமேல் வரும் செலவு ரூபாய் 67-07 சதம் (20-9-70 இல் ரூபாய் 1,000/- கொடுக்கப்பட்டிருக்கிறது)

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பிரிவு உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை "எல்லை முகவே" ஊ. நி. லா. 20 மேற்கெல்லையில் இருக்கும் கிணறும், 12 அடித் தூர்வையும், எல்லை கிழக்கு: பொன்னர் சண்முகத்தின் ஆதனமும் ஒழுங்கையும், வடக்கு தம்பு சுப்பிரமணியத்தினதும் மனைவி இரத்தினத்தினதும் ஆதனம், மேற்கு வள்ளிபுரம் செல்லையாவினுடையதும் நமசிவாயம் கந்தையாவினுடையதும் ஆதனம், தெற்கு ஒழுங்கை, இதில் முழுவதிலும் பிரிபடாப் பங்கு ஐந்தில் ஒன்று.

சி. செ. பாலசிங்கம்

அராலி வடக்கு
வட்டுக்கோட்டை. 6-4-71

கொமிஷனரும் விலமதிப்பாளரும்
எம். 9 9-4-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

(1 வேலுப்பிள்ளை சந்திரசேனன் மனைவி

(2) சிகதியானந்தி இருவரும், எபெற் மினேஸ், கொழும்பு

வழ. இல: M. B, 8148 எதிராக — வழக்காளி

(1) கந்தையா நமசிவாயம் மனைவி

(2) அன்னம்மா இருவரும், உடுவில்

(3) கனகசபை சிவசுப்பிரமணியம், உடுவில் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8148-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971 ம் ஆண்டு வைகாசி மாதம் 5-ம் திகதி [5-5-71] புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 25,400/-ம், 9-5-66 தொடக்கம் 7—11—67 வரைக்கும் ரூபாய் 20,000/-க்கு 12வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 948-21

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை "உண்டாட்டி" பர. கில. லா. 22 இதில் வடக்குப் பக்கமாகவும். தென் மேற்குப் பக்கமாகவும் விற்ற பரப்பு கி. லாச்சம் 7 புற நீக்கலாக மிகுதிக் காணி பரப்பு கி. லாச்சம் (15) பதினைந்தும் வீடும், கிணறும், பயிர் வகைகளும் இதற்கெல்லை கிழக்கு செல்லத்துரை பெண் பொன்னம்மாவுக்கும், கார்த்திகேசு சுந்தரம்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு மிகுதி ஆதனமும், ரோட்டும் மேற்கு ரோட்டும் பீதாம்பரம் ஜெகநாதனுக்குமுரிய ஆதனம், தெற்கு சின்னத்தம்பி இராமலிங்கத்திற்குமுரிய ஆதனம்.

(பதிவு இலக்கம் H. 349/293)

"கமலபதி"
ஆஸ்பத்திரிவீதி,
மண்டைதீவு, 25-3-71

மு. நவரத்தினராசா
கொமிசனரும், விலமதிப்பாளரும்,
எம். 10 10—4—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இ. M B 10378

காகன் இராசேந்திரம்
கரம்பன், —வழக்காளி

எதிராக

1 வேலுப்பிள்ளை முத்துலிங்கமும் பெண்

2 கண்ணம்மாவும் இருவரும்
காரந்தனை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10378-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1971-ம் ஞு மே (வைகாசி) மாதம் 12-ஆம் உ (12-5-71) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபாய் 1000/-ம், 16-10-1968தொடக்கம் 10-6-1969 வரைக்கும் ரூபாய் 750/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் இறுக்கும் வரை முழுத்தொகைக்கும் 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 299ம் 50 சதமும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி கரம்பன் (Kayts) கோவிற்பற்று நாரந்தனை இறை 'சந்தானை வடாக்கு' (Santhanai Vadakku) வரகுச் செய்கை கிலப்பரப்பு 10 (Lms. V. C.) பனைகளும், பனை வடலிகளும், எல்லை கிழக்கு வஸ்தியாம்பிள்ளை பிலிப்புப்பிள்ளையின் காணி, வடக்கு பாலகிருஷ்ணன் பெண் விசாலாட்சியும் ஆறுமுகம் நாகமுத்துவினதும் காணி மேற்கு தம்பிப்பிள்ளை சிவக்கொழுந்துவின் காணி, தெற்கு குளமும், நீர்வாய்க்காலும், இதுமுழுவதும்.

க. சரவணமுத்து
கொமிசனரும் விலமதிப்பாளரும்
73, குருநகர் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
31-3-71 எம். 5. 9 4-7


வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

# பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரஐயா அவர்களுக்கு உதவுங்கள்

பண்டிதர் பிரம்மஸ்ரீ வ மு இரத்தினேசுவர ஐயரவர்களுக்கு பின் வரும் அன்பர்கள் பணஉதவியுள்ளனரென்பதைப் பண்டிதமணியவர்கள் எமக்குத் தெரிவிக்கின்றனர்.

| | | ரூபா சதம். |
|---|---|---|
| 2-4-71 வரை சேர்ந்தது | | 201-00 |
| திரு. வை. முத்துக்குமாரசாமி | லண்டன் | 18-00 |
| | மொத்தம், | 219-00 |

9-4-71 — பத்திராதிபர்,

## சர்வோதய பயிற்சி நிலையம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் தமிழ்நாடு சர்வோதய சங்கத்தின் ஆதரவில் சர்வோதய பயிற்சி முகாம்களை இலங்கையில் அமைத்துள்ளது.

நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இதில் பயிற்சிபெறச்சேர்ந்துள்ளார்கள் என்று தெரிகின்றது. இந்தியாவில் இளைஞர்களுக்கு தொழில் பயிற்சியளிக்கும் திட்டத்தையும் சங்கம் வெளியிட்டுள்ளது.

# தேவாலய தரிசனம்

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

முறை தாழ்ந்தெழுந்து நமஸ்காரம் பண்ணுக.

பின்னர் தலையிலேனும் இருதயத்திலேனும கைகளைக் கூப்பிக் கொண்டு சிவலிங்கப்பெருமானுடைய திருமுன் சென்று தியானஞ் செய்து பக்தியோடு தோத்திரஞ் செய்யக் கடவர், அங்கே அருச்சகரைக் கொண்டு அருச்சனை செய்வித்து இயன்ற தக்ஷிணை கொடுக்கக் கடவர். பின்பு நடேசர், தக்ஷிணாமூர்த்தி முதலிய மூர்த்திகளையும அதன் பின தேவியையும வணங்கக் கடவர். இறுதியில் வீபூதி பெற்றுத் தரித்துக் கொண்டு, மும்முறை கை கொட்டித் தரிசன பலத்தைத் தரும் படி பிரார்த்திக்க

அதன்பின மீண்டும் திருநந்திதேவரை வணங்கிப் பலிபீடத்துக்கு இப்பால மூம் முறை விழுந்து வணங்கி, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை இயன்றளவு ஜபித்து, எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.

திருக் கோயிலிலே செய்யத்தகாத குற்றங்கள்; ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், மரணசௌச ஜனனசௌசத்துடன் போதல், மலசலங் கழித்தல் முதலாயின வாம். இக் குற்றங்களுள் ஒன்றை அறியாது செய்தவர்கள் அக்குற்றம் நீங்கும்படி பிராயச்சித்தஞ் செய்தல் வேண்டும் அக்குற்றங்களை அறிந்துங் கருவத்தினற் செய்தவர்கள் நரகத்தில் விழுந்து வருந்துவார்கள்

சிந்தையையடக்கிச்
சும்மாவிருக்கின்றதிறமரிது



பக்தர் "சிந்தையை அடக்கி சிலவிபிடங்கள்தானும் தியானத்திலிருப்பதென்பது எம்மனோர்க்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது? ஆனால், ஈழத்துக்கு வருகைதந்த மகான் ஸ்ரீலஸ்ரீ சிவபாலயோகி மகராஜ் சுவாமிகள் செயலிற் செய்து காண்பித்துள்ள அரிய சாதனையை எண்ணப் பெரும் திகைப்பாயிருக்கே அம்மான் ?

சித்தர் "தவமும் தவமுடையார்க் காகும்..." என்பார்களப்பனே! எம்மவருட் பலர்போதனை புரிவதுடன் நின்றுவிடும்பக்தர்களாக அமைந்துவிடுகிறோம்; மனிதனால் சாதனை புரியமுடியும் என்பதை நிலைநாட்டி, உலகினரை உய்யு நெறிப்படுத்த, திருவருளே இத் தவசிரேட்டரது வரவை ஏற்படுத்தியிருக்க வேண்டும்? உலகில் நிகழும் எத்தனையெத்தனை அற்புதங்களையெல்லாம் நாமறிந்து வியக்கின்றோம்! பாராட்டுகின்றோம்; ஆனால், எமது ஆன்ம ஈடேற்றங் கருதி சிந்தை குவியத் தியானத்திலிருந்து 'எம்மை—நாமே வெற்றிகொள்ளத் தயங்குகின்றோம்! தீரர்களாகத் திகழ சாதனை வழியே வேண்டும் ?

"நாயன்மார் - நாதன்"

## சுந்தரநாயகன். . .

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

என்பது பரஞ்சோதி முனிவர் கருத்து.

கடலில் வெளிப்படத் தோன்றிய விருத்திரனை இந்திரன் தனது புதியவச்சிராயுதத்தை வீசிக் கொன்றான். இந்திரன் கொல்லும் போது விருத்திரன் தவம் செய்பவன் போன்றிருந்தான் அத்துடன் விருத்திரன் யாகத்தில் தோன்றியவன். இந்த இரு காரணங்களாலும், இந்திரனைக் கொலைபாவம் பிடித்துக் கொண்டது. இக் கொலைபாவம் ஒரு கரிய உருவத்தைக் கொண்டு இந்திரனைப் பலவாறு வெருட்டியது அந்த உருவம் இந்திரனைத் தொடர்ந்து சென்று அழும், சிரிக்கும், கோபத்துடன் பற்களைக் கடிக்கும். இதற்கஞ்சிய இந்திரன் ஒரு தாமரைத் தண்டினுட் புகுந்து ஒளித்தான்

மன்னவன் இன்றித் தேவருலகம் துன்பமடைந்தது தேவர்களின் துன்பத்தைக் கண்ட வியாழபகவான் இந்திரன் மறைந்திருந்த இடத்துக்குப் போய் இந்திரனை அழைத்தார். இந்திரன் வெளியில் வந்து தன்னைக் கொலைப் பாவம் துரத்தி வருவதைக் கூறினன். குருவை இகழ்ந்தது தான் இந்திரனுடைய துன்பங்களுக்கெல்லாம் மூலகாரணம். குருவிற்கிழைத்த குற்றத்தை அக் குருதான் அருள் கொண்டு நீக்குதல் வேண்டும்.

"ஈசனுக்கிழைத்த குற்றம்
தேசிகனெண்ணிற் தீர்க்கும்
தேசிகற்கிழைத்த குற்றங்
குரவனே தீர்ப்பதன்றிப்
பேசுவ தெவனோ"

என இந்திரன் நிலையைப் பரஞ்சோதி முனிவர் எடுத்துக் கூறுகிறார். வியாழ பகவான் பழிபீதனைத் தீர்க்கப் பார்மிசை வரும்படி புத்தி கூறினர். இந்தப் பூமி தான் சிவபெருமான் ஆன்மாக்களை ஆட்கொள்ளுமிடம் என்பது பெரியோர் கொள்கை. இந்திரனும் அவனது குருவாகிய வியாழபகவானும். தேவர்கள் சிலரும் பூவுலகத்திற்கு வந்தார்கள். காசி முதலாய பல தலங்களை வணங்கித் தெற்கு நோக்கி வந்தார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்தடைந்ததும் அவனைத் தொடர்ந்த பாவம் நீங்கியது. அவ்விடத்தில், இயற்கையிலேயே பகைகொண்ட பல மிருகங்கள், பறவைகள், முதலியன பகையின்றி விளங்குவதைக் கண்டான் அது மாத்திரமா?

"அடர்சிறை மென் குயில்
ஓமென்றார்ப்ப
மடக் கிள்ளை யெழுத
தைந்துமோதத்
தொடர்பு பெற வுசரிப்பைக்
குருமொழி கேட்டாக்
குவப்ப தொடிகட் பூவை"

இக் காட்சி பெரிய புராணத்தில் வரும்

"தெள்ளுமோசைத் திருப்
பதிகங்கள் பைங்
கிள்ளை பாடுவ கேட்பன
பூவைகள்"

என்னும் காட்சியை ஒத்திருத்தல் காணலாம்.

இக்காட்சியைக் கண்ட இந்திரன் இங்கே ஒரு புனிதத் தலமும் தீர்த்தமும் இருத்தல் வேண்டும் எனத் தீர்மானித்துத் தேவர்களை அவற்றைக் கண்டு பிடிக்கும் படி ஏவினான். அவர்கள் திரும்பி வந்து ஒரு வாவியும் அவ்வாவியின் அருகே ஒரு கடம்ப மரமும், அம்மர நிழலில் ஒப்பில்லா ஒளியாய்த் தோன்றிய சிவலிங்கமொன்றுமுள்ளது, எனச் சொன்னார்கள்.

இந்திரன் மகிழ்ச்சியோடு அவ்விடத்துக்குச் சென்றான். தன் பாவம் தீர்த்த பெருமானைத் தரிசித்தான். அவருக்குப் பூசை செய்ய விரும்பினான். பூசைக்குரிய பல பொருட்களை அவ்விடத்தே வருவித்தான் தேவதச்சனைக் கொண்டு ஒரு விமானம் செய்வித்தான். மலர்களுக்கு என்ன செய்வதென்ற கவலையுடன் தடாகத்தில் ஸ்நானம் செய்தான். அப்போது அத் தடாகத்தில் பல சூரியர்கள் ஒன்று சேர்ந்து தோற்றுவது போலப் பொற்கமலம் ஒன்று தோற்றியது. அதனால் அத் தடாகம் பொற்றாமரைவாவி எனப் பெயர் பெற்றது. இந்திரன் அம் மலரைச் சிவலிங்கத்துக்குச் சூட்டிப் பூசை செய்து மகிழ்ந்தான்.

"இடருறப் பிணித்த விந்தப்
பழியினின்றென்னையீர்த்துன்
அடியினுக் கன்பனுக்கு மருட்
கடல் போற்றி சேற் கண்
மடவரல் மணாள போற்றி
கடம்ப மாவனத்தாய் போற்றி
சுடர்விடு விமானமேய
சுந்தர விடங்கா போற்றி"

என்று தோத்திரம் செய்து தேவலோகம் சென்று மகிழ்வோடு அரசுசெய்திருந்தான்.


## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், நாவலர்வீதி 230 A தில்லையம்பலம் நவரெத்தினம் அவர்களிடம 1969ம் ஞு மே (வைகாசி) மீ 1-ந் (1-5-69) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் (11-5-71) திகதிக்கு முன் மீட்கப்படாதவை 1971ம் ஞு மே (வைகாசி) மீ 13 உ (13-5-71) வியாழக்கிழமை காலை ஒன்பதரை மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்.

"இராசகிரி"
643, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்,

கொமிஷனரும் விலமதிப்பாளரும்
எம் 2 9, 23-4-71,


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 9—4—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது. பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்